[2008 மே 6

(இ) பொது நிறுவனங்கள் குழு உறுப்பினர்கள் தேர்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பொது நிறுவனங்கள் குழு. பொது நிறுவனங்கள் குழுவிற்கு பதினாறு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல் வேண்டும். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 211-ன்கீழ், 2008-2009 ஆம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழுவின் உறுப்பினர்களாக இருக்கும்படி, பதினாறு உறுப்பினர்களை மாண்புமிகு பேரவைத் தலைவர் குறிப்பிடும் நாளன்று இப்பேரவை தேர்ந்தெடுக்கும்"

என்னும் தீர்மானத்தை மொழிகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

(ஈ) உரிமைக் குழு உறுப்பினர்கள் தேர்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உரிமைக் குழு. உரிமைக் குழுவிற்கு பதினான்கு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல் வேண்டும். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 227-ன்கீழ், 2008-2009 ஆம் நிதியாண்டிற்குரிய உரிமைக் குழுவின் உறுப்பினர்களாக இருக்கும்படி, பதினான்கு உறுப்பினர்களை மாண்புமிகு பேரவைத் தலைவர் குறிப்பிடும் நாளன்று இப்பேரவை தேர்ந்தெடுக்கும்"

என்னும் தீர்மானத்தை மொழிகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

7. அறிவிப்புகள்

(அ) பேரவைக் குழுக்களுக்கு உறுப்பினர்கள் தேர்தல்-கால அட்டவணை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. பேரவைக் குழுக்களுக்கான தேர்தல். ஒற்றை வாக்கு முறைப்படி தேர்தல் நடத்துவதற்குப் பேரவைத் தலைவர் வகுத்துள்ள விதிமுறைகளின்கீழ், மதிப்பீட்டுக் குழு (Committee on Estimates), பொதுக் கணக்குக் குழு (Committee on Public Accounts), பொது நிறுவனங்கள் குழு (Committee on Public Undertakings), உரிமைக் குழு (Committee of Privileges) ஆகியவற்றிற்கு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க வேட்பாளர்கள் வேட்புத் தாள்களை 2008 ஆம் ஆண்டு மே திங்கள் 12 ஆம் நாள் திங்கட்கிழமை நண்பகல் 12-00 மணிக்குள் சட்டமன்றப் பேரவைச் செயலாளரிடம் சேர்ப்பிக்க வேண்டும். வேட்புத் தாள்களை செயலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

வேட்புத் தாள்கள் 2008 ஆம் ஆண்டு மே திங்கள் 12 ஆம் நாள் திங்கட்கிழமை மாலை 4-00 மணிக்கு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெறும். விலகிக்கொள்ள விரும்பும் வேட்பாளர்கள் 2008 ஆம் ஆண்டு மே திங்கள் 13 ஆம் நாள் செவ்வாய்க்கிழமை காலை 10-00 மணிக்குள் விலகிக்கொள்ளலாம்.

வேட்பாளர்களின் எண்ணிக்கை, நிரப்பப்பெற வேண்டிய இடங்களின் எண்ணிக்கைக்கு மேற்படுமாயின், குழுக்களுக்கான உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க தேர்தல் நடைபெறும் நாள் பின்னர் அறிவிக்கப்படும்.